[1972 மார்ச் 7

கோயில்களில் தீ மிதி முதலியவைகளுக்குத் தடை

** 350 வினா—திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பக்தியின் பெயரால் அலகு குத்திக்கொள்ளுதல், தீ மிதித்தல் ஆகிய செயல்களைத் தடை விதிப்பதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கோவில்களில் ஆண்டவனுக்கு ஆடுகள், மாடுகள் இவற்றைப் பலியிடுவதோடு, இப்படி மனிதர்கள் மீது அலகு குத்திக் கொள்வதைத் தடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஆடு, மாடு இவை பலியிடப்படுவது என்பதில் நேரிடையாக உயிர் வதையைப் பார்த்து, சட்டத்தைக் கொண்டு வந்தோம். தீ மிதித்தல், அலகு குத்திக் கொள்வது போன்ற செயல்களில் அசம்பாவிதமான சம்பவங்கள் எதுவும் ஏற்பட்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. அதையும் பகுத்தறிவு பிரசாரத்தின் மூலம்தான் தடை செய்யமுடியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தீ மிதித்தலுக்கு, அலகு குத்திக் கொள்வதற்குத் தடை இருப்பதாக அறிகிறேன். அதையும் மீறி சில பேர் அலகுகளைக் குத்திக் கொள்கிறார்கள். தடைச் சட்டம் 10, 20 ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டது. இருந்தும், அலகு குத்திக் கொள்பவர்கள், ஆண்டவனுக்குக் காவடி எடுப்பவர்கள், நாவிலே நேரிடையாகக் குத்திக் கொள்ளாமல், மேலுங்கீழும் சில கருவிகளைப் பொருத்திக் கொண்டு, அலகுமட்டும் தெரிவதுபோல், ஃபிட்டிங்ஸ் வைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள், பார்த்திருக்கிறேன். சட்டம் இருந்தாலும், அலகு குத்திக் கொள்வதாகத் தந்திரம் செய்து ஏமாற்றி வருகிறார்கள். இவற்றைத் தடுத்துச் சட்டத்தைத் தீவிரப்படுத்த முயற்சி எடுக்கலாம்.

திரு. வீ. இராசகோபால் : தலைவர் அவர்களே, இன்னமும் ஆண்டவன் பெயரால், ஆடையில்லாமல், மாரியம்மனுக்கு என்று வேப்பிலையை அணிந்து கொண்டு, தமிழ் நாட்டின் நாகரிகத்தை

1972 மார்ச் 7]

பாதிக்கும் வகையில் அநாகரிகமாகவும் அசிங்கமாகவும் செய்கிறுர்கள். அதை அரசு தடை செய்யுமா ? உதாரணமாக என் தொகுதியில் ஊத்துக்கோட்டையில், சித்திரையில் அப்படிப்பட்ட விழா நடைபெறுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : இதுவரையில் விளம்பரம் ஆகாமல் இருந்த அந்த ஊருக்கு, இங்கே பேசிக் கூட்டம் சேர்த்ததற்கு நன்றி. (சிரிப்பு)

மீனளக் கார்ப்பரேஷன்.

* 340 **வினு—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு அரிசனநல் அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மீனளக் கார்ப்பரேஷன் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தமிழ்நாடு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லே.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இப்போது நம்முடைய நாட்டிலே உணவுப்பற்றுக்குறை இருக்கிறது. இந்தப் பற்றுக் குறையைப் போக்க, மீன் உணவை அதிக அளவில் பயன்படுத்தலாம் என்று சொல்லப்படுகிறது. எனவே, மீன் உணவைப் பெருக்கும் வகையில் இந்தத் துறையில் ஒரு கார்ப்பரேஷனை ஏற்படுத்தி, மீன்வளத்தைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, ஏற்கெனவே மீனள கார்ப்பரேஷன் சார்பில் ஒரு கழகம் அமைக்க வேண்டுமென்று அப்போதிருந்த இயக்குநர் கருத்துத் தெரிவித்தார். அதற்குப் பின்னுல் வந்த இயக்குநர், கேரளாவிலும், ஓரிசாவிலும் நடைபெற்று வரும் கழகங்களைப் பார்வையிட்டு, அவை நல்லமுறையில் லாபகரமாக நடைபெருமல் நஷ்டத்தில் செயல்பட்டு வருவதாகவும், அதனுல் தமிழ்நாட்டில் கார்ப்பரேஷன் அமைக்கத் தேவையில்லே என்றும் தெரிவித்தார். ஏற்கெனவே மத்திய அரசு நடத்திவரும் மீனளக் கழகத்தில் நமது மாநிலம் பங்கு பெற்றிருக்கிறேம். நமது பங்குத் தொகையாக மூன்று